

மஹேந்திரா பொறியியல் கல்லூரியில்

# பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி

ஆட்டையாம்பட்டி, ஜன.12–

நாமக்கல் மஹேந்திரா பொறியியற் கல்லூரி வளாகத்தில் பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி மகாத்மா காந்தி கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரி தலைவர் எம்.ஜி.பாரத்குமார் முன்னிலையில் பேராசிரியர் மாடசாமி முதன்மை விருந்தினராக பங்கேற்று மாணவர்களிடையே பொங்கல் சிறப்புகளையும், பொறியியற் கல்வி மாணவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது ஒன்று எனவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில முகங்களைவிட அனைத்து முகங்களினுடைய திறமைகளை கண்டறிந்து ஒரு புதிய சமூகப் பரிமாணத்தை ஏற்படுத்த முயல வேண்டும் என்று பேசினார்.

விழாவில் கல்லூரி செயல் இயக்குநர் இரா. சாம்சன், ரவீந்திரன், குழும முதல்வர்கள் முனைவர் எம்.மாதேஸ்வரன், என்.மோகனசுந்தரராஜு, ஜே.ராஜவேல், சி.சிவலிங்கம், பாலம் புத்தக நிறுவனர் சகஸ்ரநாமம் துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆயிரத்திற்கும் அதிகமான மாணவ – மாணவியர் கலந்து கொண்டனர்.

மாலை மலர் சேலம் 12–1–2015